பிரச்சினையில் நாம் நம்முடைய அணுகுமுறையை—எதிர்க் கட்சித் தலைவரே குறிப்பிட்டதைப் போல கனிவோடும் துணிவோடும் இருக்க வேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொண்டு, கனிவோடு பேசி, அவர்களுடைய சம்மதத்தைப் பெற்று, கண்ணகி ஆலயம் தமிழகத்தினுடைய எல்லைக்குள்ளே இருக்குமாறு செய்ய எல்லா வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அந்தப் பிரச்சினை தீருமானால், இதுபோன்ற திருவிழாப் பிரச்சினைகள் வருவதற்கே இடம் இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) சேரன்மாதேவித் தொகுதியில் பொட்டல் கிராமத்தில் மக்களுக்கு குடும்ப அட்டைகள் வழங்கப் பெறாதது குறித்தும் சில இடங்களில் நியாய விலைக் கடைகள் அமைக்கப் பெறாததால் ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்து.

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவி தொகுதியில் கள்ளிடைக்குறிச்சிக்கு அருகே உள்ள பொட்டல் கிராமத்தில் சுமார் 400 மக்களுக்கு ரேஷன் கார்டுகள் இதுவரையில் வழங்கப்படவில்லை. அதற்கடுத்தாற்போல, பாப்பாகுடி யூனியனில் பனையங்குறிச்சி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே ரேஷன் கடை கிடையாது. அங்கேயிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்திலே இடைகால் என்ற ஊருக்குப் போய்த்தான் மக்கள் இன்றைக்கு ரேஷன் பொருட்களை வாங்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அங்கே அவர்கள் போய்க் கேட்பதற்குள் பொருட்கள் தீர்ந்துவிடுகின்றன. அதேபோல் பாப்பாகுடி யூனியனில் புதுப்பட்டி அருகே உள்ள காசிநாதபுரம் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. இவர்கள் 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள புதுப்பட்டி என்ற கிராமத்திற்குப் போய் பொருட்கள் வாங்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.

கடயம் யூனியனில் தெற்கு மடத்தூர் பஞ்சாயத்தைச் சேர்ந்த புங்கம்பட்டி என்ற கிராமத்தில் ரேஷன் கடை இல்லை. 5 கிலோ மீட்டர் போக வேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி கள்ளிடைக்குறிச்சி கிராமம், பொட்டல் உட்கடை கிராமத்தில் இதுவரையில், 3–5–1990 வரையில், 134 பேர்கள் தங்களுக்கு புதிய ரேஷன் கார்டுகள் வேண்டுமென்று மனுச் செய்திருக்கிறார்கள். அது உரிய பரிசீலனைக்குப் பின்னர் அவர்களுக்கு வெகு விரைவில் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. பொன். முத்துராமலிங்கம்] [1990 மே 11

அடுத்து பனையங்குறிச்சி, காசிநாதபுரம், புங்கம்பட்டி ஆகிய கிராமங்களில் நியாய விலைக் கடைகள் இல்லை. அருகிலே உள்ள கிராமங்களுக்குச் செல்ல வேண்டும் என்றால், பல கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அங்கே பகுதி நேரக் கடைகள் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி அதிகாரிகள் ஆய்வு செய்து, அதற்குப் பின்னர் தேவைப்பட்டால், அங்கே பகுதி நேரக் கடைகளைத் திறக்கலாம் என்று அரசினுடைய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு இருக்கிறது. சாத்தியக் கூறுகள் இருக்குமானால், குறிப்பிட்ட இடங்களில் பகுதி நேரக் கடைகள் திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) புயலால் ஏற்பட்டுள்ள சேதங்களையொட்டிய நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசு நிதி ஒதுக்கியுள்ளது குறித்தும் "ரா" நிறுவனம் குறித்து முதலமைச்சர் பேசியது பற்றி வெளியில் ஒரு கட்சித் தலைவர் தெரிவித்துள்ள கருத்து குறித்தும்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான, பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினையைத் தகவலுக்காக நான் எழுப்புகிறேன். நேற்றையதினம் தொலைக் காட்சியில் ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் உருவான புயல், அதனால் உருவான சேதங்கள், இவைகளுக்கு மத்திய அரசின் சார்பாக ஆந்திர மாநிலத்திற்கு 89 கோடியும், தமிழ் மாநிலத்திற்கு 39 கோடியும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்காக அளித்திருப்பதாகவும், பிரதமர் அவர்கள் அதற்கான அறிவிப்பைச் செய்திருப்பதாகவும், தொலைக்காட்சியில் செய்தியை நாம் அறிந்தோம். இன்று பத்திரிகையிலேயும் அந்தச் செய்திகள் வந்திருக்கின்றன. புயலோடு போட்டி போட்டுக் கொண்டு புயல் வேகத்தை விட மிக வேகமாக நிவாரணப் பணிகளைக் குறித்து மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் செயல் பட்டதற்காகவும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், வருமுன் காக்க என்பதைப் போல பாரத துணைப் பிரதமர் மாண்புமிகு தேவிலால் அவர்கள் சுட்டிக்காட்டி இருப்பதைப் போல, மிகச் சிறந்த முறையில் தடுப்பு நடவடிக்கைகளை, காக்கும் நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு இருக்கிறது என்று அவர்கள் சொல்லி இருப்பதற்கு ஏற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முனைப்பாக செயல்பட்டு இருக்கிறார்கள். எனவே, இந்த நிவாரணப் பணிகளுக்கான தொகைகளை அவர்கள் எந்த வகையிலே நிர்ணயித்திருக்கிறார்கள் என்பதையும் அரசு அதிகாரப்பூர்வமான—பத்திரிகை செய்தியைத்தான் நாம் படித்திருக்கிறோம் அதிகாரப்பூர்வமான—செய்திகள் ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா என்பதையும் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.